# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2022

FWC

| கணக்கீடு I | Two Hours | 33 | T | I |
|---|---|---|---|---|
| Accounts I | Gr -13 (2022) | | | |

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிகோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளி கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் உரித்தாகும்.

சுட்டெண் :.....................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 – 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

### பகுதி – I

01) நிதிக்கணக்கீட்டினையும் முகாமைக் கணக்கீட்டினையும் வேறுபடுத்தும் அடிப்படையல்லாதது எது?
   (1) தகவல்களைப் பயன்படுத்துவோர்.
   (2) பயன்படுத்தப்படும் தகவல்கள்
   (3) சட்டத்தேவை
   (4) அறிக்கையிடும் காலம்
   (5) தகவல் வழங்கல் ( )

02) நிதியாண்டுக்குரிய வருமானங்களுக்கும் செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடு குறிப்பிடுவது.
   (1) நிதிநிலைமை (2) நிதிநிலைமை மாற்றம் (3) காசில் ஏற்பட்ட மாற்றம்
   (4) நிதிப்பெறுபேறு (5) உரிமையாண்மை மாற்றம் ( )

- (03) ஆம் (04) ஆம் (05) ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
  பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் செழியன் வியாபாரத்தில் இடம்பெற்றன.
  1. தூயவன் PLC நிறுவனத்திற்கு ரூபா 180000 கிரயமான இருப்புக்கள் ரூபா 300000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டது.
  2. தூயவன் PLC நிறுவனத்தினால் திருப்பி அனுப்பிய இருப்புக்களின் விற்பனைப்பெறுமதி ரூபா 15000, தூயவன் PLC ஏட்டில் கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்படாதபோதிலும் செழியன் கணக்கில் ரூபா 1500 என வரவு வைக்கப்பட்டிருந்தது.
  3. செழியன் வியாபாரத்தினால் தூயவன் PLC நிறுவனத்திடம் ரூபா 8000 கழிவு அனுமதித்து பெற்ற காசு ரூபா 72000 ஆகும். இது தூயவன் PLC யின் ஏட்டில் காசு கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் கழிவு பதியப்படாத போதிலும் காசுக் கொள்வனவாகப் பதியப்பட்டிருந்ததுடன் செழியன் வியாபாரக் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

03) செழியன் வியாபாரத்தின் ஏட்டில் இடம்பெற்ற மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட மூல ஏடுகளின் ஒழுங்கு வரிசை

(1) விற்பனை நாட்குறிப்பேடு, வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு, காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு
(2) கொள்வனவு நாட்குறிப்பேடு, வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு, காசு கொடுப்பனவு நாட்குறிப்பேடு
(3) விற்பனை நாட்குறிப்பேடு, உட்திரும்பல் நாட்குறிப்பேடு, காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு
(4) கொள்வனவு நாட்குறிப்பேடு, வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு.
(5) விற்பனை நாட்குறிப்பேடு, உட்திரும்பல் நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு.

( )

04) செழியன் வியாபாரத்தின் ஏட்டில் மேற்காட்டப்பட்ட மூன்று கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் சொத்துக்கள் உரிமையாண்மை என்பவற்றில் ஏற்பட்ட தேறிய மீதி சரியானது எது?

| | சொத்துக்கள் (ரூபா) | உரிமையாண்மை (ரூபா) |
|---|---|---|
| (1) | 97000 | 97000 |
| (2) | 106000 | 106000 |
| (3) | 113000 | 113000 |
| (4) | 112000 | 112000 |
| (5) | 140000 | 114000 |

( )

05) தூயவன் PLC நிறுவனத்தின் ஏட்டில் மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தவறுகள் திருத்திய பின்னர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் தவறுகளைத் திருத்த முன்னர் கடன்கொடுத்தோர் அட்டவணை மீதியும் சரியானது

| | திருத்திய கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு மீதி (ரூபா) | திருத்தமுன் கடன்கொடுத்தோர் அட்டவணை மீதி (ரூபா) |
|---|---|---|
| (1) | 300000 | 205000 |
| (2) | 220000 | 219500 |
| (3) | 213000 | 298500 |
| (4) | 205000 | 298500 |
| (5) | 213000 | 219500 |

( )

06) வணிகநிறுவனமொன்று ரூ 50000 கொள்விலையான இருப்புக்கள் ரூ80000 இற்கு கடனுக்கு விற்பனை செய்தது. இவற்றுள் ரூ 12000 விற்பனை பெறுமதியான பொருட்களை வருமதியாளர் திருப்பி அனுப்பி உள்ளார்.

மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களினால் கணக்கீட்டு சமன்பாட்டின் மாறிகள் மீது ஏற்படுத்திய தேறிய விளைவில் சரியானது

| | சொத்துக்கள் (ரூபா) | = | பொறுப்புக்கள் (ரூபா) | + | உரிமையாண்மை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| (1) | + 18000 | = | - | + | +18000 |
| (2) | + 25500 | = | - | + | +25500 |
| (3) | +30000 | = | +12000 | + | +18000 |
| (4) | +18000 | = | -12000 | + | +30000 |
| (5) | +68000 | = | +50000 | + | +18000 |

( )

07) பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்து கொண்டுள்ள சுடரொளி நிறுவனத்தில் திரட்டப்பட்ட 2022 மார்ச் மாதத் தகவல்கள் பின்வருமாறு

- VAT 10% உள்ளடங்களாக விற்பனைப் பெறுமதி ரூ 176000
- கொள்வனவு ரூ 90000 VAT 10% கணிக்கப்படல் வேண்டும்.
- VAT 10% உள்ளடங்கிய வெளித்திரும்பல்கள் ரூ 5500
- காசாகச் செலுத்திய பெறுமதிசேர் வரி ரூ 3500

2022 மார்ச் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய VAT கணக்கு மீதி யாது?

(1) பொறுப்பு ரூ 7500 (2) சொத்து ரூ 4000 (3) பொறுப்பு ரூ 4000
(4) சொத்து ரூ 5650 (5) பொறுப்பு ரூ 5650 ( )

08) சில்லறை வியாபாரம் ஒன்றின் வருமானக் கூற்றில் 31.03.2022இல் முடிவடைந்த வருடத்துக்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| விபரம் | ரூபா (000) |
|---|---|
| விற்பனைகள் | 2000 |
| உழைத்த வட்டி | 250 |
| மோட்டார் வாகன விற்பனை மீதான ஆதாயம் | 150 |
| வட்டிச் செலவுகள் | 300 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 500 |
| விற்பனைக் கிரயம் | 1200 |
| பற்றுக்கள் - சரக்குகள் | 200 |

இந்த வியாபாரத்தினால் இனங்காணப்பட வேண்டிய 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவுகள்

| | மொத்த வருமானம் (ரூ 000) | மொத்தச் செலவுகள் (ரூ 000) |
|---|---|---|
| (1) | 1200 | 800 |
| (2) | 1200 | 1000 |
| (3) | 2250 | 2000 |
| (4) | 2400 | 2000 |
| (5) | 2400 | 2200 |

( )

09) ஈழநிலா வணிகமானது கிரயத்தில்25% மொத்த இலாபத்துடன் பொருட்களை விற்பனை செய்கின்றது. 01.04.2021 தொடக்கம் 31.03.2022 வரையிலான நிதியாண்டிற்குரிய தகவல்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| | ரூபா 000 |
|---|---|
| 01.04.2021 இல் இருப்பு | 400 |
| 31.03.2022 இல் இருப்பு | 360 |
| பொருள் பற்று (கிரயத்தில்) | 30 |
| விற்பனைகள் | 5500 |
| விற்பனையின் அடிப்படையில் தரகு | 110 |

31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டின் கொள்வனவுப் பெறுமதி யாது?

(1) ரூபா 4330000 (2) ரூபா 4390000 (3) ரூபா 4940000
(4) ரூபா 4880000 (5) ரூபா 4115000 ( )

10) கீழே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 2022.03.31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்படவேண்டிய நிறுவனத்தின் காசு மீதி என்ன?

2022.03.31 இல் வங்கிக் கூற்று மீதியின்படி வங்கி மேலதிகப்பற்று ரூ (10000)

2022.03.31 இல் வைப்பிலிடப்பட்டதும் ஆனால் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ 45000

2022.03.31 இல் வழங்கப்பட்டதும் ஆனால் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 30000

கடன்பட்டோர்களால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் ரூ15000

(1) ரூ 5000 (2) ரூ (20000) (3) ரூ 25000
(4) ரூ (25000) (5) ரூ (40000) ( )

11) அட்டுறு, கணக்கீட்டுக் காலம், தேறல் போன்ற எண்ணக்கருக்கள் மூன்றும் பொருத்தமாக அமையும் சந்தர்ப்பம் எது?

(1) ஐயக்கடனுக்கு ஒதுக்கீடு செய்தல்
(2) கடன் கொள்வனவினை நிதியாண்டில் கொள்வனவாக இனம்காணல்
(3) விற்பனைக் கிரயத்தைக் கணிப்பதற்கு இறுதி இருப்பினைக் கழித்தல்
(4) கடன்விற்பனையினை நிதியாண்டின் வருமானமொன்றாக இனம் காணல்
(5) கணக்காண்டொன்றின் முடிவில் சொத்து, பொறுப்பு தொடர்பான கணக்குகளின் மீதிகளைக் கீழ் கொண்டு செல்லல் ( )

12) பின்வரும் சமன்பாடுகளில் எது உற்பத்திக்கிரயத்தைத் தீர்மானிக்கப் பயன்படும்

(1) மூலக்கிரயம் + மேந்தலைக்கிரயங்கள்
(2) மூலப்பொருட்கிரயம் + தொழிற்சாலை மேந்தலைக்கிரயங்கள்
(3) மூலக்கிரயம் + தொழிற்சாலை மேந்தலைக்கிரயம்
(4) மூலப்பொருட்கிரயம் + நேர் கூலிக்கிரயம்
(5) மூலக்கிரயம் + உற்பத்தியல்லா மேந்தலைக் கிரயம் ( )

13) வணிக நிறுவனமொன்றில் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பில் ஊழியருக்குக் கொடுத்த தேறிய சம்பளம் ரூ 324000 ஆகும். இத்தேறிய சம்பளமானது ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மொத்தச் சம்பளத்தில் 10% கழிக்கப்பட்டு கொடுத்த தொகையாகும். நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மொத்த சம்பளத்தில் 15% மும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% மும் செலுத்துகின்றது.

31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டில் ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு யாது?

(1) ரூ 360000 (2) ரூ 414000 (3) ரூ 450000
(4) ரூ 424800 (5) ரூ 366120 ( )

14) பொதிகை வணிக நிறுவனமானது மாதாந்தம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றது. ஜனவரி 31 இல் எழுதுகருவி உபகரண இருப்பு ரூ 4600 காணப்பட்டது. பெப்ரவரி மாதம் ரூ 7400 பெறுமதியான எழுதுகருவி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு எழுதுகருவி உபகரண செலவீனக்கணக்கில் வரவில் பதியப்பட்டது. பெப்ரவரி 28இல் எழுதுகருவி உபகரண இருப்பாக ரூ 2400 காணப்பட்டது. பெப்ரவரி மாதம் நிதிக்கூற்றில் எழுதுகருவி உபகரண செலவாகக் கொண்டு செல்லப்படும் தொகை யாது?

(1) ரூ 7400 (2) ரூ 12000 (3) ரூ 5000
(4) ரூ 5200 (5) ரூ 9600 ( )

15) திருமண மண்டபமொன்றை வாடகைக்கு விடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனமொன்றில் 2022 ஏப்ரல் மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. இம் மண்டபம் ரூ 400000 வாடகைக்கு விடப்படுகிறது. இவ்வாடகையில் 25% ஆனது மண்டபத்தை முன்பதிவு செய்யும் போது செலுத்த வேண்டியுள்ளதுடன் மீதிப்பணமானது திருமண வரவேற்பு முடிவடைந்து ஒரு வார காலத்தினுள் செலுத்தப்படுதல் வேண்டும்.

| திகதி | கொடுக்கல் வாங்கல் | தொகை (ரூ) |
|---|---|---|
| 02.04.2022 | 28.03.2022 இல் நடைபெற்ற திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட மீதித் தொகை | 300000 |
| 05.04.2022 | 27.04.2022 இல் நடைபெறவிருக்கும் திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட முற்பணம் | 100000 |
| 15.04.2022 | 10.05.2022 இல் நடைபெறவிருக்கும் திருமண வரவேற்புக்காகப் பெறப்பட்ட முற்பணம் | 100000 |
| 30.04.2022 | 2022 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் | 330000 |

2022 ஏப்ரல் மாதத்திற்கான வருமானம், இலாபம் / (நட்டம்) மற்றும் 30.04.2022 இலுள்ளவாறான வருமதிகள் எவை?

| | வருமானம் (ரூ) | இலாபம் / (நட்டம்) (ரூ) | வருமதிகள் (ரூ) |
|---|---|---|---|
| (1) | 200000 | (130000) | 600000 |
| (2) | 400000 | 70000 | 300000 |
| (3) | 500000 | 170000 | 600000 |
| (4) | 700000 | 370000 | 300000 |
| (5) | 800000 | 470000 | 600000 |

( )

16) 01.06.2021 இல் சில்லறைக் காசாளரிடம் உள்ள சில்லறைக் காசு மீதி ரூபா 2400 அத்திகதியில் வசக்கட்டுத் தொகையாக ரூபா 3600 மீள்நிரப்பப்பட்டது எனின், மே மாதத்திற்கான சில்லறைச் செலவுகளின் மொத்தம் மற்றும் வசக்கட்டுத் தொகை யாதாக இருக்கும்?

(1) ரூபா 2400, ரூபா 6000
(2) ரூபா 3600, ரூபா 2400
(3) ரூபா 6000, ரூபா 2400
(4) ரூபா 2200, ரூபா 3000
(5) ரூபா 3600, ரூபா 6000

( )

17) பங்குடைமையொன்றில் நன்மதிப்பிற்கான சீராக்கத்தினை மேற்கொள்வதற்கான காரணம்

(1) நன்மதிப்பானது எதிர்கால பொருளாதார நன்மைகளை மேம்படுத்துவதினால்
(2) நன்மதிப்புப் பெறுமதியானது காலத்துக்குக் காலம் மாற்றமடைவதனால்
(3) உரிமையாண்மையில் எல்லாப் பங்காளர்களுக்கான அக்கறையினை நியாயமான முறையில் உறுதி செய்ய வேண்டும் என்பதனால்.
(4) பங்காளர்கள் வியாபாரத்தின் நன்மதிப்பைத் தனித்தனியாக உழைப்பதினால்.
(5) நன்மதிப்பானது பங்காளர்களுக்கிடையில் சமமாகப் பகிரப்படல் வேண்டுமென்பதால்.

( )

- **18, 19 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

  முல்லை, மருதம் ஆகியோரால் நடாத்தப்படும் பங்குடமையின் நிபந்தனைகள் பின்வருமாறு:
  - முல்லை, மருதம் ஆகியோருக்கிடையில் இலாப, நட்டப்பகிர்வு விகிதமானது முறையே 3:2 ஆகும்.
  - முல்லை, மருதம் ஆகியோர் வருடாந்தச் சம்பளமாக முறையே ரூ 450000, ரூ350000 இற்கு உரித்துடையவர்கள்

  ஏனைய தகவல்கள்:

  நடைமுறைக் கணக்கின் செலவு மீதிகள்:

| | 31.03.2022 இல் (ரூ 000) | 31.03.2021இல் (ரூ000) |
|---|---|---|
| முல்லை | 600 | 250 |
| மருதம் | 480 | 200 |

*31.03.2022*இல் முடிவடைந்த வருடத்தில் செலுத்திய சம்பளங்கள் மற்றும் பற்றிய சரக்கு

| | முல்லை (ரூ000) | மருதம் (ரூ 000) |
|---|---|---|
| சம்பளங்கள் | 300 | 200 |
| பற்றிய சரக்கு | 100 | 120 |

மருதத்தினால் பங்குடமைக்குக் கொடுக்கப்பட்ட கடனுக்காகச் செலுத்த வேண்டிய வருடாந்த வட்டி ரூ *50000* ஆனது அவரின் நடைமுறைக்கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

18) *31.03.2022* இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்குடமையின் இலாபம்

*(1)* ரூ *500000*　*(2)* ரூ *850000*　*(3)* ரூ *1250000*

*(4)* ரூ *1300000*　*(5)* ரூ *1350000*　(　)

19) *31.03.2022* இல் முடிவடைந்த வருடத்திற்கான மருதத்திற்குப் பகிர்வு செய்யப்பட்ட மொத்த இலாபம்

*(1)* ரூ *200000*　*(2)* ரூ *250000*　*(3)* ரூ *280000*

*(4)* ரூ *550000*　*(5)* ரூ *600000*　(　)

20) இலங்கையினுள் பின்பற்றப்படுகின்ற "நிதி அறிக்கைப்படுத்தலில் எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கு" அமைய நிதித் தகவல்களின் அடிப்படை தர ரீதியான பண்புகளில் "பொருத்தமான தன்மை" இருக்க வேண்டுமாயின் அவை கொண்டிருக்க வேண்டிய துணைப் பண்புகளில் சரியானது / சரியானவை

A – அளவிடக்கூடிய தன்மை

B – சான்றுப்படுத்தக்கூடிய தன்மை

C – பூரணத்தன்மை

D – எதிர்வுகூறக்கூடிய திறன்

(1) A,C,D ஆகியன　*(2)* A,B,D ஆகியன　*(3)* A,B,C ஆகியன

(4) B, C, D ஆகியன　*(5)* A, B, C, D ஆகிய எல்லாம்　()

21) நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன நியாயமான பெறுமதிக்கேற்ப வெளிப்படுத்தும் போது சரியான கணக்கீட்டுத் தரப்பண்பும் மீறப்பட்ட எண்ணக்கருவும் முறையே.

(1) பொருத்தப்பாடு, வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
(2) ஒப்பீட்டுப் பண்பு, வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
(3) பொருத்தப்பாடு, பாதுகாப்பு எண்ணக்கரு
(4) உண்மையான பிரதிநிதித்துவம், பாதுகாப்பு எண்ணக்கரு
(5) உண்மையான பிரதிநிதித்துவம், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு ( )

- ***22ஆம் 23ஆம், 24ஆம் ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.***

வரையறுத்த பாண்டியன் பொதுக்கம்பனியின் 31.03.2022இல் முடிவடைந்த நிதி வருடத்துடன் தொடர்புடையவையாகும்.

| விபரம் | ரூபா 000 |
|---|---|
| விற்பனைகள் | 1500 |
| மொத்த இலாபம் | 700 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 400 |
| விநியோக வான் அகற்றல் இலாபம் | 30 |
| வருமான வரிச்செலவுகள் | 120 |
| செலுத்திய இடைக்கால பங்குலாபம் | 140 |
| மீள்மதிப்பீட்டு மிகை (கட்டடம்) | 200 |
| மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை (காணி) | 140 |

31.03.2020 இல் முடிவடைந்த வருடத்தில் காணியினை முதல் தடவை மீள்மதிப்பிபடப்பட்ட போது ரூபா 80000 மிகையொன்று இனங்காணப்பட்டுள்ளது. கட்டடங்கள் 31.03.2022 இல் முதல் தடவையாக மீளமதிப்பிடப்பட்டுள்ளன.

22) இலங்கை கணக்கீட்டு நியமம் 01(LKAS – 1) இன் படி 31-03-2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த வருமானமும் மற்றும் ஆண்டுக்கான இலாபமும் எவை?

| | மொத்த வருமானம் (ரூபா 000) | ஆண்டுக்கான இலாபம் (ரூபா 000) |
|---|---|---|
| (1) | 1730 | 270 |
| (2) | 1730 | 150 |
| (3) | 1650 | 70 |
| (4) | 1650 | 70 |
| (5) | 930 | 270 |

( )

23) LKAS – 1 (நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட ஏனைய முற்றுமடங்கிய வருமானமும், மற்றும் மொத்த முற்றுமடங்கிய வருமானமும் எவை?

| | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூபா 000) | மொத்த முற்றுமடங்கிய வருமானம் (ரூபா 000) |
|---|---|---|
| (1) | 60 | 390 |
| (2) | 210 | 280 |
| (3) | 200 | 320 |
| (4) | 120 | 270 |
| (5) | 60 | 270 |

( )

24) LKAS – 1(நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்) இன்படி 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்தில் நிறுத்தி வைத்த வருவாயில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு யாது?

(1) ரூபா 10000 (2) ரூபா 40000 (3) ரூபா 150000
(4) ரூபா 60000 (5) ரூபா 70000 ( )

- **25ஆம் 26ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

முகக்கவசங்கள், கையுறைகள் விற்பனை செய்யும் தாரகி பொதுக்கம்பனி வணிகத்தில் 2022.03.31 இல் உள்ளவாறு இருப்புக்கள் பின்வருமாறு

| இருப்புக்கள் உருப்படி | கிரயம் (ரூபா 000) | தேறிய நிகரத்தக்க பெறுமதி (ரூபா 000) |
|---|---|---|
| முகக்கவசங்கள் | 1200 | 1300 |
| கையுறைகள் | 1850 | 1600 |

2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டில்

○ விற்பனைகள் ரூபா 98500000

○ விற்பனையில் 10% மொத்த இலாபம் உழைக்கப்படுகிறது.

25) LKAS – 2 (இருப்புக்கள் நியமத்திற்கமைய) இன்படி 2022.03.31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் சொத்தாக முன்கொண்டு செல்லப்படும் இருப்பு பெறுமதி யாது?

(1) ரூபா 3050000 (2) ரூபா 2900000 (3) ரூபா 3150000
(4) ரூபா 2800000 (5) ரூபா 2550000 ( )

26) 2022.03.31 முடிவடைந்த ஆண்டு இப்பொருட்களின் விற்பனை வருமானத்துக்கெதிராக இருப்புக்கள் தொடர்பான மொத்தச் செலவு யாது?

(1) ரூபா 8890000 (2) ரூபா 88650000 (3) ரூபா 250000
(4) ரூபா 9850000 (5) ரூபா 2800000 ( )

27) SLFRS 15 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருவாய்) இன்படி பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று / கூற்றுக்களைத் தெரிவு செய்க.

A- வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தமொன்று பல்வேறு 'செயற்றிறன் கடப்பாடுகளை' உள்ளடக்கியிருக்க முடியும்.

B- வணிகமொன்றின் வருவாய் மற்றும் ஏனைய அனைத்து வருமானங்கள் ஆகியன நிதிக்கூற்றுக்களில் இந்நியமத்தின்படி மாத்திரம் இனங்காணப்படல் வேண்டும்.

C- நிறுவனமொன்று ஒப்பந்தத்திலுள்ள ஒவ்வொரு செயற்றிறன் கடப்பாடும் திருப்தி செய்யப்படும்பொழுது மட்டும் ஒப்பந்தத்தின் மீதான வருவாயை இனங்கானவேண்டும்.

D- உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளர் ஒருவருக்கு மாற்றுவதற்கான பரிமாற்றத்தின்போது நிறுவனத்திற்கு உரித்துடையதென நிறுவனம் எதிர்பார்க்கும் கைம்மாற்றுத் தொகையானது கொடுக்கல் வாங்கல் விலையாகும்.

(1) A, B, மாத்திரம் (2) B மாத்திரம் (3) B, D மாத்திரம்
(4) C மாத்திரம் (5) A, B, C, D எல்லாம் ( )

28) பின்வருவனவற்றில் எவை நிறுவனமொன்றில் LKAS 37 (ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்) இன்படி நிகழத்தக்க பொறுப்புக்களாக வெளிப்படுத்த முடியும்?

A – வங்கியிடம் இருந்து பெற்ற கடன்

B – நிறுவனத்திற்கு எதிரான தீர்க்கப்படாத வழக்கு

C – நிதிநிறுவனமொன்றிடம் பெற்ற ஈட்டுக்கடன்

D - இன்னொரு நிறுவனத்தினால் பெறப்பட்ட கடனொன்றிற்கு ஓர் உத்தரவாளராகச் செயற்படுவதற்கான உடன்படிக்கையொன்று

(1) A,B,C ஆகும். (2) B,D ஆகும். (3) A,C ஆகும்

(4) A,D ஆகும் (5) B,C ஆகும் ( )

29) வரையறுத்த தேன்மொழி பொதுக்கம்பனியானது 01.04.2019 இல் ரூ 8000000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. அதன் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதியானது முறையே 8 வருடங்கள் மற்றும் ரூ 1600000 ஆக இருந்தது. அச்சொத்தின் பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் 01.04.2021 இல் மீள் மதிப்பிடப்பட்டது. புதிய மதிப்பீடுகளின்படி மீதியாகவிருக்கும் பயன்தரு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் முறையே 4 வருடங்கள் மற்றும் ரூ 1000000 ஆகும்.

LKAS 16 (ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்) இன்படி 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான இயந்திரத்தின் பெறுமானத்தேய்வு எது?

(1) ரூ 900000 (2) ரூ 1166777 (3) ரூ 1350000

(4) ரூ 1600000 (5) ரூ 1750000 ( )

30) கண்ணம்மா PLC நிறுவனம் 01.04.2021இல் குத்தகை (SLFRS – 16) நியமத்திற்கமைய மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தது. இத்திகதியில் மோட்டார் வாகனத்தின் நியாயமான பெறுமதி ரூ 4800000 ஆகக் காணப்பட்டதுடன், அதே தினத்தில் ரூ 1200000 முதல் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டு மார்ச் 31 இலும் வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணமாக ரூ 1255000 தொடர்ந்து 4 ஆண்டுகளுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். முதலாவதும், இரண்டாவதும் தவணைக் கட்டணங்களில் உள்ளடங்கிய குத்தகை வட்டிகள் முறையே ரூ 345000, ரூ 290000 ஆகும். SLFRS – 16 (குத்தகை) இன்படி 31.03.2022 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறையல்லா பொறுப்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்பு.

(1) ரூபா 965000 (2) ரூபா 2510000 (3) ரூபா 2690000

(4) ரூபா 1445000 (5) ரூபா 1725000 ( )

31) பொதுப்பேரேட்டில் வணிகமொன்றினால் பராமரிக்கப்படும் பின்வரும் கணக்குகளிற்குப் பொருத்தமான பேரேட்டுக் கணக்கு வகைப்படுத்தல்களைக் குறிப்பிடுக.

| | கணக்கு | வகைப்படுத்தல் |
|---|---|---|
| A | திரண்ட பெறுமானத்தேய்வு | ……………………………………………….. |
| B | பணிக்கொடைக்கான ஏற்பாடு | ………………………………………………… |
| C | உட்திரும்பல் | ………………………………………………… |
| D | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | ………………………………………………… |

32) கம்பனியொன்று தொடர்பில் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பேணப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் கணக்கீட்டுத் தகவலின் பண்புசார் குணாதிசயங்களைக் குறிப்பிடுக.

| | நிலைமை | பண்புசார் குணாதிசயம் |
|---|---|---|
| A. | ஆண்டறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் தகவலை வெளிப்படுத்தும் போது இரண்டு வருடங்களின் பெறுபேறுகளைக் குறிப்பிடுவது | ………………………………………… |
| B. | நடைமுறையல்லாத சொத்துக்களை வெளிப்படுத்தும் போது நியாயமான பெறுமதியில் வெளிப்படுத்தல் | ………………………………………… |
| C. | கம்பனியில் இடைக்கால நிதியறிக்கை களைத் தயாரித்து வெளிப்படுத்தல் | ………………………………………… |
| D. | கம்பனிகளுடைய நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது LKAS / SLFRS – 1 அடிப்படையில் தயாரித்து வெளிப் படுத்தல் | ………………………………………… |

33) கீழே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றிற்குமான இரட்டை விளைவு விதியை அதற்கு நேரே குறிப்பிடுக.

| | கொடுக்கல்வாங்கல்கள் | இரட்டைவிளைவு விதி |
|---|---|---|
| A. | காசுக்கு கொள்வனவு செய்த பொருட்கள் ரூ 10000 | …………………………………………<br>………………………………………… |
| B. | சென்மதியாளருக்கு ரூ 5000 பெறுமதி யான பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டது. | …………………………………………<br>………………………………………… |

34) நிறுவனமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளினால் அந்நிறுவனத்தின் கணக்காண்டின் இறுதியில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமையாண்மை ஆகியவைகளின் மீதிகள் அதிகரிக்குமா, குறையுமா, மாற்றமடையாதா என்பதைக் குறிப்பிடுக.

| | கொடுக்கல் வாங்கல்கள் | சொத்துக்கள் | பொறுப்புகள் | உரிமையாண்மை |
|---|---|---|---|---|
| A. | உரிமையாளர்களின் மூலம் மூலதனத்தை அதிகரித்தல் | ……………………. | ……………………. | ……………………. |
| B. | ஐயக்கடனிற்கான ஒதுக்கம் செய்தல் | ……………………. | ……………………. | ……………………. |
| C. | வட்டியுடன் கூடிய கடன் தவணைப் பணக் கொடுப்பனவு | ……………………. | ……………………. | ……………………. |
| D. | வருடமுடிவில் சாதாரண பங்குதாரர்களிற்கான பங்கிலாப பிரகடனம் | ……………………. | ……………………. | ……………………. |

35) பின்வரும் வழுக்களினால் வணிகமொன்றின் பரீட்சை மீதியின் இணக்கத்தில் மாற்றம் ‘ஏற்படும்’, ‘ஏற்படாது’ எனக் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| 1. | ரூபா 40000 விற்பனைப் பட்டியல் ஏடுகளில் விடுபடல் | …………………………….. |
| 2. | ரூபா 15000 காசுக்கணக்குகள் செலவு மீதி பரீட்சை மீதிக்கு வரவுப் பக்கத்திற்கு மாற்றப்பட்டது. | …………………………….. |
| 3. | கொடுத்த கழிவு ரூபா 4000 பெற்ற கழிவுக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது. | …………………………….. |
| 4. | வியாபார மதிப்புக் குறைப்பு நட்டம் ரூபா 3000 கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்பட்ட போதிலும் உரிய நபர் கணக்கில் பதியப்படவில்லை. | …………………………….. |

36) கம்பனியொன்று தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் எந்த கணக்கீட்டு எண்ணக்கருவை மிகச் சிறப்பாக விபரிக்கிறது என்பதைக் குறிப்பிடுக.

| | சந்தர்ப்பம் | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|---|
| A. | காணியொன்றின் நியாய பெறுமதி கூடுதலாக இருந்த போதும் அதனைப் பெற்றுக்கொண்ட விலையில் அறிக்கையிடல் | …………………………….. |
| B. | இயந்திரத்தைப் பயன்படுத்த எதிர்பார்க்கும் காலத்திற்கு அதன் பெறுமானத்தேய்வை இனங்காணல் | …………………………….. |
| C. | ஐந்து வருட பயன்தரு காலத்தைக் கொண்ட கோவைகளின் கிரயத்தை செலவாகக் காட்டல் | …………………………….. |
| D. | சரக்கிருப்பை மதிப்பீடு செய்வதற்காக “முதல் உள் முதல்வெளி” விலையிடல் முறையினைத் தொடர்ச்சி யாகப் பயன்படுத்துதல் | …………………………….. |

37) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்வரும் விடயங்களைச் சீராக்கம் செய்வதனால் அவை இலாபத்தில் அதிகரிப்பினையா (I) அல்லது குறைவினையா (D) அல்லது மாற்றங்களை ஏற்படுத்தாதா (NC) என்பதைக் குறிப்பிடுக.
(இவ்விடயங்கள் புத்தகங்களில் இன்னமும் சீராக்கப்படவில்லை)

| | | இலாபத்தில் தாக்கம் (I,D,NC எனக் குறிப்பிடுக) |
|---|---|---|
| A. | சென்மதி மின்சாரம் | ………………………………… |
| B, | வருமதி வட்டி வருமானம் | ………………………………… |
| C. | கடன்கொடுத்தோரிடம் பெற்ற கழிவுகள் | ………………………………… |
| D. | முதற்தடவையாக நிலம் மீள்மதிப்பின் போது ஏற்பட்ட மிகை | ………………………………… |

- ***38ஆம், 39ஆம் வினாக்களுக்கு விடையளிக்கும் போது பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.***

*நிறுவனமொன்றிற்கு 2022 மார்ச்சில் ஏற்பட்ட ரூபா 60000 தொகையான அலுவலகச் செலவானது, அலுவலக உபகரணக்கணக்கில் ரூபா 600000 ஆகப் பதியப்பட்டுள்ளது. அலுவலக உபகரணமானது வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் கிரயத்தில் பெறுமானத்தேய்விடப்படுகிறது. உபகரணத்திற்கு அந்த மாதத்திற்கான பெறுமானத்தேய்வும் செய்யப்பட்டுள்ளது.*

*38)* 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபத்தில் இப்பிழையினால் ஏற்பட்ட தேறிய விளைவு என்ன?

……………………………………………………………………………………………………

*39)* அலுவலக உபகரணங்கள், அலுவலகச் செலவுகள் ஆகியவற்றுக்கான பேரேட்டுக் கணக்குகளைச் சீராக்குவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

*40)* உற்பத்தி நிறுவனமொன்றின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியை கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களானவை அதிகரிக்குமா அல்லது குறைக்குமா அல்லது மாற்றமின்மையா என்பதைக் குறிப்பிடுக.

| | கொடுக்கல் வாங்கல் | அதிகரிக்கும் / குறைக்கும் / மாற்றமின்மை |
|---|---|---|
| A. | பாவித்த இயந்திரத்தை கடனுக்கு விற்பனை செய்தல் | ……………………………… |
| B. | கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் திரும்ப வருதல் | ……………………………… |
| C. | வருட காலத்தினுள் அறவிடமுடியாக் கடன்களைப் பதிவழித்தல் | ……………………………… |
| D. | வருட முடிவில் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டைச் செய்தல் | ……………………………… |

*41)* பின்வரும் செலவினங்கள் ஆடை உற்பத்தி நிறுவனமொன்றுடன் தொடர்புடையதாகும். இதனை நேர், நேரில் செலவு என வகைப்படுத்துக.

| செலவுகள் | நேர்/ நேரில் |
|---|---|
| *1.* துணிகள் | …………………………………… |
| *2.* நூல் | …………………………………… |
| *3.* பொத்தான் | …………………………………… |
| *4.* ஆடை உற்பத்தியாளர் கூலி | …………………………………… |

- **42ஆம், 43ஆம், 44ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ் தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துக.**

கோதை, பாவை ஆகியோர் இலாபநட்டத்தினை முறையே 5:3 என பகிரும் பங்குடைமையில் 01.04.2021 இல் ஆண்டாள் என்பவர் புதிய பங்காளராகச் சேர்ந்துள்ளார். இத்தினத்தில் ஆண்டாள் ரூ *200000* மூலதனத்திற்கென காசாகக் கொண்டு வந்ததுடன், பங்குடைமையின் நன்மதிப்பானது ரூ *160000* என மதிப்பீடு செய்யப்பட்டது. நன்மதிப்பானது புத்தகங்களில் சொத்தொன்றாக இனங்காணப்படாததுடன், அது தொடர்பான அனைத்து சீராக்கங்களும் பங்காளர் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டது. இத்தினத்தில் இருந்து கோதை, பாவை, ஆண்டாள் ஆகியோரின் புதிய இலாப நட்டப் பகிர்வு விகிதம் முறையே 4:3:3 எனப் பகிர்ந்து பங்குடைமையைத் தொடர்ந்து நடத்துகின்றனர். ஒவ்வொரு பங்காளரும் வருடாந்தம் சம்பளமாக ரூ *150 000* பெற உரித்துடையவர்கள். *31.03.2021* இல் கோதை, பாவை ஆகியோரின் மூலதனக் கணக்கு, நடைமுறைக்கணக்கு மீதிகள் பின்வருமாறு இருந்தன.

| | கோதை | பாவை |
|---|---|---|
| மூலதனக் கணக்கு | ரூ 300000 | ரூ 250000 |
| நடைமுறைக் கணக்கு | ரூ *60000* (செலவு) | ரூ. 40000 (செலவு) |

இவ்வருடத்தில் கோதை, பாவை, ஆண்டாள் என்போர் சம்பளமாக முறையே ரூ*50000*, ரூ*40000*, ரூ*30000* காசாக எடுத்துள்ளார்கள்

*31.03.2022* இல் முடிவடைந்த ஆண்டில் பங்காளர்களின் இலாபப்பகிர்வு, பங்காளர்களின் எடுப்பனவு என்பன நடைமுறைக்கணக்கில் பதியப்பட்டபின் ஆண்டாள் நடைமுறைக்கணக்கு மீதி ரூ *165000* ஆகும்.

42) *01.04.2021* இல் பங்குடைமையில் நன்மதிப்பைப் பதிவதற்கான பொது நாட்குறிப்பு பதிவினைத் தருக.

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

…………………………………………………………………………………………………..

43) *31.03.2022* இல் முடிவடைந்த நிதியாண்டில் பங்குடமை வணிகத்தில் உழைத்த இலாபம் யாது?

…………………………………………………………………………………………………..

44) *31.03.2022* இல் முடிவடைந்த நிதியாண்டில் உரிமையாண்மை மீதியில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

…………………………………………………………………………………………………..

45) இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் கீழே தரப்பட்டுள்ள கணக்குகளுக்குப் பொருத்தமான கணக்கு வகைப்படுத்தல்களைக் குறிப்பிடுக.

1. முற்பணமாகப் பெற்ற சந்தா ……………………………………………………………..
2. வருமதிச் சந்தா ……………………………………………………………..

3. ஆயுள் சந்தா மீதி ……………………………………………………………..

4. பிரவேசக் கட்டணம் ……………………………………………………………..

46) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இளந்தளிர் வணிக உணவு விநியோக வணிகத்தில் இடம்பெற்றுள்ளன.

- 15.01.2022 உணவு விநயோகிப்பதற்கான கட்டளை ஒன்றைப் பெற்றுக்கொண்டதுடன் முற்பணமாக ரூ 100000 காசு பெறப்பட்டது.
- 28.01.2022 மேற்படி கட்டளைக்கான உணவுகளை விநியோகித்துள்ளதுடன் காசாக ரூ 200000 பெறப்பட்டது.
- 05.02.2022 இக்கட்டளைக்கான மீதிப்பணம் ரூ 50000 பெறப்பட்டது.

மேற்படி கட்டளையின் வருமானத்தை இனம்காணுதல் தொடர்பான

அ) வருமானத்தை இனம்காணும் திகதி :…………………………………

ஆ) இத்திகதியில் இனம்காணப்பட வேண்டிய வருமானம் :…………………………………

இ) மிகவும் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கரு :…………………………………

47) வரையறுக்கப்பட்ட பரிதி பொதுக்கம்பனி ரூபா 3900000 நியாயமான பெறுமதி கொண்ட மோட்டார் வாகனமொன்றைக் குத்தகை ஒப்பந்த முறையில் வரையறுத்த இசைப்பிரியா பொதுக்கம்பனியிடமிருந்து 2021.04.01 இல் கொள்வனவு செய்தது.

- குத்தகைக் கடன் காலம் 5 வருடங்கள்
- 2022.03.31 இல் முதலாவது நிலையான தவணைக் கட்டணம் ரூபா 1000000 செலுத்தப்பட்டது.
  (ஒவ்வொரு வருடமும் குத்தகைத் தவணைக் கட்டணம் சமமானது)
- குத்தகைத் தவணைக் கட்டணங்களில் உள்ளடங்கிய வட்டிகள்

| | ரூபா |
|---|---|
| முதல் குத்தகைத் தவணைக் கட்டண வட்டி | 320000 |
| இரண்டாவது குத்தகை வட்டி | 270000 |
| மூன்றாவது குத்தகை வட்டி | 200000 |

அ) 2022.03.31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாப் பொறுப்பு யாது?

……………………………………………………………………………………………

ஆ) 2022.03.31 இல் உள்ளவாறான நடைமுறைப் பொறுப்பு யாது?

……………………………………………………………………………………………

- **48ஆம், 49ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

வரையறுத்த தமிழிசை பொதுக்கம்பனியில் 2022.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் வரிக்கழிக்க முன் இலாபம் ரூபா 720000 காட்டப்பட்டது. இவ் இலாபம் காண்பதில் 2022.03.31 இல் காணி மீள்மதிப்பீடு தொடர்பான பின்வரும் செயற்பாடு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2022.03.31 இல் காணி இரண்டாவது தடவையாக ரூபா 220000 இனால் குறைத்து மீள்மதிப்பிடப்பட்டது. இக்காணி 2020.03.31 இல் முதல் தடவை மீள மதிப்பிடப்பட்ட போது ஏற்பட்ட மிகை ரூபா 150000 மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. நடப்பாண்டு வருமானவரி ஏற்பாடு வரிகழிக்க முன் இலாபத்தில் 40% ஆகும்.

48) 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் காணி மீளமதிப்பீடு தொடர்பில் பொதுநாட்குறிப்பு பதிவு தருக.

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

49) 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டில்.

அ) ஆண்டுக்கான இலாபம்

………………………………………………………………………………………………

ஆ) மொத்த முற்றும் அடங்கிய வருமானம்

………………………………………………………………………………………………

50) கம்பனியொன்றில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பில் உரிமையாண்மை, நிறுத்தி வைத்த உழைப்பு, சொத்துக்கள் என்பவற்றில் அதிகரிக்குமா, குறையுமா அல்லது மாற்றமின்மையா என்பதை அதற்கு நேரே குறிப்பிடுக.

| | நிகழ்வுகள் | உரிமை யாண்மை | நிறுத்திவைத்த உழைப்பு | சொத்துக்கள் |
|---|---|---|---|---|
| A. | முதல் தடவை நட்டத்தில் மதிப்பிடப்பட்ட தளபாட பொருத்துக்கள் இரண்டாம் தடவை அதனை விட குறைந்த பெறுமதியில் மிகையாக மதிப்பிடல் | | | |
| B. | ஆண்டில் செலுத்திய பங்கு இலாபம் | | | |
| C. | நிறுத்தி வைத்த உழைப்பில் இருந்து ஒதுக்கம் மூலதனமாக்கல் பங்கு வழங்கல் | | | |
| D. | முதல் தடவை காணி மிகையாக மீள மதிப்பிடு | | | |

(4 x 50 = 200 புள்ளிகள்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2022

FWC

**கணக்கீடு II**
**Accounts II**

**Three Hours**
**Gr -13 (2022)**

**33 T II**

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

**அறிவுறுத்தல்கள்:**

- முதலாம்,இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் வழங்கப்படும்.

01) மின்சார உபகரண விற்பனை வணிகத்தில் ஈடுபடும் வரையறுக்கப்பட்ட ஒளிக்கதிர் பொதுக்கம்பனியின் ஏடுகளிலிருந்து 2022.03.31 இல் பரீட்சை மீதி பின்வருமாறு

| விபரம் | வரவு (ரூ 000) | செலவு (ரூ 000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 70000 | |
| 2021.04.01 இல் இருப்பு | 2000 | |
| கொள்வனவு | 41500 | |
| வியாபார வருமதிகள் | 3100 | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 43030 | |
| விநியோகக் கிரயம் | 3800 | |
| நிர்வாகக் கிரயம் | 4200 | |
| ஏனைய செலவுகள் | 1500 | |
| நிதிக்கிரயம் | 200 | |
| செலுத்திய பங்குலாபம் | 1700 | |
| செலுத்திய வருமான வரி | 2000 | |
| குத்தகைத் தவணைக் கட்டணக் கொடுப்பனவு | 1920 | |
| 2021.04.01 ஆதன, பொறி உபகரண திரண்ட பெறுமானத்தேய்வு | | 17500 |
| விற்பனை | | 85000 |
| கூறப்பட்ட மூலதனம் (சாதாரண பங்குகள்) | | 40000 |
| 2021.04.01 இல் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 1500 |
| பொது ஒதுக்கம் | | 600 |
| பகிரப்படாத இலாபம் | | 7250 |
| 12% வங்கிக்கடன் (2021.10.01 இல் பெறப்பட்டது) | | 5000 |
| வியாபார சென்மதிகள் | | 17000 |
| வழக்கு தொடர்பான நட்டஈடு ஏற்பாடு (2021.04.01) | | 150 |
| வருமான வரி ஏற்பாடு (2021.04.01) | | 600 |
| வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களின் படிகளுக்கான ஏற்பாடு (2021-04-01) | | 350 |
| | **174950** | **174950** |

**மேலதிகத் தகவல்கள்**

*2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்வருவன தொடர்பில் சீராக்கங்கள் செய்யப்படுதல் வேண்டும். (நிதிக்கூற்றுக்களை 2022-0615 இல் வெளியிடுவதற்கு இயக்குனர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்)*

i. *2022.03.31 இல் இருப்புக்களின் கிரயம் ரூ 3500000 ஆகும். அதன் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ 3650000 ஆகும்.*

ii. *மத்திய சுற்றாடல் அதிகார சபையானது கம்பனிக்கு எதிராக இடப்பட்ட வழக்கு தொடர்பில் தீர்ப்பானது 2022.04.25 இல் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ரூ 400000 இழப்பீடு வழங்கும்படி உத்தரவிடப்பட்டது. இது தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடே பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ளது.*

iii. *2022.03.31 இல் காணப்பட்ட வியாபார வருமதிகளின் ரூ 200000 கடன்பட்டோர் முறிவடைந்ததாக 2022.05.01 இல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டக் கடன்களின் படிகளுக்கான ஏற்பாட்டினை ரூ 300000 ஆகப் பேணிச் செல்லல் வேண்டும்.*

iv. *வணிகத்தின் மொத்தச் சொத்துக்களையும் ஒரு தொகுதியாகக் கருதி 2022.01.01 இல் ரூ 1000000 இற்குக் காப்புறுதி செய்யப்பட்டது. 2023.01.01 இல் முடிவடையும் வருடத்திற்காகச் செலுத்தப்பட்ட மொத்த தவணைக் கட்டணமும் நிர்வாகச் செலவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

v. நிகழாண்டு முதல் உத்தரவாத அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதனடிப்படையில் விற்பனையில் 5% உத்தரவாத ஏற்பாடு செய்ய வேண்டும் என உறுதியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

vi. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு விபரம் பின்வருமாறு:

| விபரம் | *2021.04.01. இல் கிரயம்/ மீள்மதிப்பிட்ட பெறுமதி (ரூ000)* | *2021.04.01 இல் திரண்ட தேய்வு (ரூ000)* |
|---|---|---|
| காணி | 20000 | - |
| கட்டடம் | 25000 | 10000 |
| காரியாலய தளபாட உபகரணங்கள் | 10000 | 3000 |
| மோட்டார் வாகனம் | 15000 | 4500 |
| | 70000 | 17500 |

vii. *நிகழாண்டில் கையகப்படுத்திக் கொண்ட மற்றும் அகற்றப்பட்ட ஆதனம் பொறி உபகரணங்களின் விபரம் பின்வருமாறு :*

- *2021.10.01 இல் ரூ15000000 கிரயமான கட்டிடமொன்று கொள்வனவு செய்யப்பட்டது.*
- *ரூ 2000 000 கிரயமானதும் ரூ 1600000 தேறிய புத்தகப் பெறுமதியுடையதுமான உபகரணமொன்று ரூ 1650000 இற்கு விற்கப்பட்டது. இவை தொடர்பில் எப்பதிவும் இடம்பெறவில்லை.*

viii. *2021.04.01 இல் காணியானது இரண்டாவது முறையாக ரூ 18000000 ஆக மீள்மதிப்பிடப்பட்டது. காணி முதற் தடவையாக மீள் மதிப்பிட்டதில் ஏற்பட்ட மிகையே மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.*

ix. கட்டடம், காரியாலய தளபாட உபகரணங்கள், மோட்டார் வாகனம் என்பன நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 20% தேய்விடப்படல் வேண்டும்.

x. *கம்பனியானது 2021.04.01 இல் சொந்துபயன்படுத்தல் உரிமை அடிப்படையில் இயந்திரமொன்றை 4 வருடகாலத்திற்குப் பெற்றுக் கொண்டது. 2021.04.01 இல் இயந்திரத்தின் பெறுமதி ரூ 4000000 ஆவதுடன் அதன் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். 2021.04.01 இல் ஆரம்ப வைப்புத்*

தொகையாக ரூ 960000 வும், முதல் வருட தவணைக்கட்டணமாக ரூ 960000வும் செலுத்தப்பட்டது. ஆரம்ப கணக்கீட்டில் குத்தகைப் பொறுப்பு ரூ 3040000 ஆகும். 2022.03.31 மற்றும் 2023.03.31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான குத்தகை வட்டி முறையே ரூ 304000 மற்றும் ரூ 238000 ஆகும். ஆரம்ப வைப்புத் தொகை மற்றும் முதல் குத்தகைத் தவணைக் கொடுப்பனவு என்பன குத்தகைத் தவணைக் கட்டணக் கணக்கில் பதியப்பட்டது தவிர வேறு எப்பதிவும் இடம்பெறவில்லை.

xi. ஆண்டு காலத்தில் செலுத்தப்பட்ட வருமான வரியினுள் கடந்த வருடத்திற்காகச் செலுத்திய ரூ 500000 உம் உள்ளடங்கும். 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான வரி ரூ 2300 000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

xii. நிர்வாகச் செலவினுள் இயக்குனர் சம்பளம் ரூ 500000 உம், கணக்காய்வுக் கட்டணக் கொடுப்பனவு ரூ 300000 உம் உள்ளடக்கப்பட்டுள்ளது. வங்கிக் கடனுக்கான வட்டி அட்டுருவாக உள்ளது.

xiii. 31-03-2022 இல் பொது ஒதுக்கத்திற்கு ரூ 800000 மாற்றுவதற்கும், இறுதி பங்கிலாபமாக ரூ 1200000 வழங்குவதற்கும் இயக்குனர்கள் தீர்மானித்தனர்.

**வேண்டப்படுவது**

LKAS – 01 (நிதிக் கூற்றுக்களை அறிக்கைப்படுத்தல்) நியமத்திற்கமைய வரையறுக்கப்பட்ட ஒளிக்கதிர் பொதுக்கம்பனியின் பிரசுரிக்கத்தக்க பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்பு உட்பட)

1) 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டம் மற்றும் ஏனையமுற்றுமடங்கிய வருமானக்கூற்று.
2) 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றல் கூற்று
3) 2022.03.31 இல உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

(40 புள்ளிகள்)

02) அ) முருகன், குமரன், வேலன் ஆகியோரால் நடாத்திச் செல்லப்படும் பங்குடமை வணிகத்திலிருந்து 01.04.2021 இல் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | ரூ 000 |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 12000 |
| 12% முதலீடு | 7000 |
| இருப்பு | 700 |
| வியாபார வருமதிகள் | 600 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 500 |
| | 20800 |

| உரிமையும் பொறுப்பும் | |
|---|---|
| உரிமை – முருகன் | 6500 |
| குமரன் | 5000 |
| வேலன் | 2800 |
| 20% வங்கிக் கடன் | 6000 |
| வியாபார சென்மதிகள் | 500 |
| | 20800 |

மேலதிக தகவல்கள்

i) முருகன், குமரன், வேலன் பங்குடைமையின் ஒப்பந்தம் பின்வருமாறு

- முறையே 2 : 2: 1 என இலாபநட்டம் பகிரப்படும்.
- ஒவ்வொரு பங்காளரும் மாதாந்தம் ரூ 20000 சம்பளம் பெற உரிமையுண்டு.
- ஆரம்ப மூலதன மீதிக்கு 10% வட்டி வழங்கப்படும்
- பங்காளர்களின் கடன்களுக்கு 12% வட்டி வழங்கப்படும்.

ii) 2021.04.01 இல் உள்ள பங்காளர் உரிமை மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள மூலதன கணக்கு மீதிகள் பின்வருமாறு

| மூலதனக்கணக்கு | (ரூ 000) |
|---|---|
| முருகன் | 5000 |
| குமரன் | 4000 |
| வேலன் | 3000 |

iii) 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பங்குடமை வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு

| விபரம் | (ரூ 000) |
|---|---|
| விற்பனை (70% கடன் அடிப்படையில்) | 10000 |
| கொள்வனவு (60% கடன் அடிப்படையில்) | 4000 |
| கடன்பட்டோரிடம் பெற்றது | 7100 |
| கடன்கொடுத்தோருக்கு கொடுப்பனவு | 2300 |
| செயற்பாட்டுச் செலவு கொடுப்பனவு | 1200 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண பெறுமானத் தேய்வு | 300 |
| பற்று (ஒவ்வொரு பங்காளரும் ரூ 50000 படி) | 150 |

iv) 2022.03.31 இல் இருப்பின் பெறுமதி ரூ 800000 ஆகும்.

v) செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவினுள் முருகனின் தனிப்பட்ட வருமான வரிக் கொடுப்பனவு ரூ50000 உள்ளடக்கப்பட்டுள்ளது.

vi) 2021.10.01 இல் குமரன் தனக்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்றை வணிகத்தில் ஈடுபடுத்தினார். அதன் கிரயம் மற்றும் எஞ்சிய பெறுமதி முறையே ரூ2200000 மற்றும் ரூ 200000 ஆகும். அதன் பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு முறையில் தேய்விடப்படும். இது தொடர்பில் எப்பதிவும் ஏடுகளில் இடம்பெறவில்லை.

vii) வேலனினால் 2022.01.01 இல் ரூ 500000 கடனாக வழங்கப்பட்டது தொடர்பில் எப்பதிவும் இடம்பெறவில்லை.

viii) முதலீட்டிற்கான வட்டி பெற வேண்டியுள்ளது. மேலும் வங்கிக் கடன் வட்டி இன்னும் செலுத்தப்படவில்லை.

ix) 2022.03.31 இல் வேலன் பங்குடைமை வணிகத்திலிருந்து ஓய்வு பெற்றார். அத்தினத்தில் பங்குடைமையின் நன்மதிப்பு ரூ 2000000 என மதிப்பிடப்பட்டது. அத்தினத்திலிருந்து முருகனும், குமரனும் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர இணங்கினர். அத்தினத்தில் வேலனிற்குச் செலுத்த வேண்டிய தொகையில் 50% காசாகச் செலுத்தப்பட்டதுடன் எஞ்சிய 50% தொகை கடன் கணக்கிற்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

வேண்டப்படுவது

1) 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடைமையின் வருமானக்கூற்று (பகிர்வு உட்பட)
2) 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் மூலதனக்கணக்கு, நடைமுறைக் கணக்கு மற்றும் வேலன் கடன் கணக்கு
3) 2022.03.31 இல் பின்வரும் கணக்கு மீதிகள்
    - வியாபார வருமதிகள்
    - வியாபார சென்மதிகள்
    - ஏனைய பெறவேண்டியவை (ஏனைய வருமதிகள்)
    - ஏனைய செலுத்த வேண்டியவைகள் (ஏனைய சென்மதிகள்)

(20 புள்ளிகள்)

ஆ) திலீபன் வணிகத்தில் *2022.03.31* இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அத்தினம் தயாரிக்கப்பட்ட வரைபு நிதிக்கூற்றுப்படி வருடத்திற்கான இலாபம் ரூ *650000* எனக் கணிக்கப்பட்டது. பின்பு ஏடுகளைப் பரிசீலனை செய்து பின்வரும் தகவல்கள் வெளிப்பட்டன.

i. விற்பனை நாளேட்டின் மொத்தத் தொகை ரூ *450000* விற்பனைக் கணக்கில் ரூ *540000* எனப் பதியப்பட்டுள்ளது.

ii. கடன்பட்டோரிடமிருந்து பெற வேண்டிய ரூ *14000* அறவிடமுடியாக்கடனாகப் பதிவளிக்கப்பட்ட போதும் இது தொடர்பில் பொதுப் பேரேட்டில் பதிவுகள் எதுவும் இடம்பெறவில்லை.

iii. *2021.10.01* இல் ரூ *60000* இற்கு கொள்வனவு செய்யப்பட்ட காரியாலய உபகரணமானது காரியாலயச் செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. வணிகமானது அனைத்து ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்கு ஆண்டுக்கு கிரயத்தில் 10% தேய்விடுகின்றது.

iv. வங்கிக் கடனுக்காகச் செலுத்திய வட்டி ரூ *10000* வட்டி வருமானக் கணக்கில் செலவுப்பக்கம் பதியப்பட்டுள்ளது.

v. எதிர்வரும் ஆண்டிற்காகப் பெற்ற விற்பனை முற்பணம் ரூ *40000* விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

vi. மோட்டார் வாகனக் கணக்கு மீதி ரூ *400000* பரீட்சை மீதியில் ரூ *40000* என பதியப்பட்டிருந்தது.

vii. கொள்வனவுப் பட்டியல் ரூ *25000* முற்றாக ஏடுகளிலிருந்து தவறவிடப்பட்டிருந்தது.

viii. காசுக்கொடுப்பனவு நாளேட்டின் கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூ *30000* பெற்ற கழிவுக் கணக்கில் வரவிலும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவிலும் பதியப்பட்டிருந்தது.

ix. *2022.03.31* இல் இருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதியானது அதன் கிரயத்தை விட ரூ *35000* குறைவாக இருந்தது. எனினும் இலாபக் கணிப்பீட்டின் போது இருப்பின் கிரயப் பெறுமதியே மதிப்பிடப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:

*1)* மேலுள்ள வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப்பதிவு

*2)* *2022.03.31* இல் முடிவடைந்த ஆண்டுக்கான சரியான இலாபம்

*3)* மேலுள்ள கொடுக்கல் வாங்கல்களில் (ii), (iii), (v), (ix) ஆகிய வழு, விடுபடுதல்களுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

*(20 புள்ளிகள்)*

*(மொத்தம் 40 புள்ளிகள்)*

*03)* ஆரோக்கியம் வணிகமானது *01.04.2021* இல் மருந்துகளை விற்பனை செய்யும் தனியுடைமை வணிகமொன்றை ஆரம்பித்தது. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் *2021* ஏப்ரல் மாத்தில் இடம்பெற்றன.

1. உரிமையாளரான ஆரோக்கியம் ரூபா *600000* ஐக் காசாக முதலிட்டு அத்தொகையை வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக்கணக்கொன்றை ஆரம்பித்தார். அவர் ரூபா *800000* பெறுமதியான இரத்தப் பரிசோதனை இயந்திரமொன்றையும் ஆரம்ப மூலதனத்தின் ஒரு பகுதியாக கொண்டு வந்தார்.
2. ரூ *200000* கிரயமான மருந்துவகைகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
3. ரூ *40000* கிரயமான மருந்துவகைகள் தரக்குறைவு காரணமாக வழங்குநருக்குத் திருப்பியனுப்பப்பட்டன.
4. ரூ *60000* கிரயமான மருந்துகள் ரூ *100000* இற்குக் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
5. வாடிக்கையாளர் ஒருவர் ரூ *10000* இற்கு விற்கப்பட்ட மருந்துக்களைத் திருப்பியனுப்பியுள்ளார். இம் மருந்துகளின் கிரயம் ரூ *6000* ஆகும்.

6. மருந்து வழங்குநருக்குச் செலுத்தவேண்டிய தொகை ரூ 160000 ஆனது 5% கழிவுடன் கொடுத்துத் தீர்க்கப்பட்டது.
7. ஆரம்ப சுகாதார நிலையமொன்றுக்கு ரூ 3000 கிரயமான மருந்துகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.
8. வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து ரூ 1000 கழிவு அனுமதிக்கப்பட்ட பின்னர் ரூ 9000 காசோலையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
9. ஏப்ரல் மாதத்துக்குச் செலுத்த வேண்டிய மின்சாரம் ரூ 7000 ஆகும்.
10. இரத்தப்பரிசோதனை இயந்திரத்தின் மாதாந்த பராமரிப்புச் செலவு ரூ 5000 செலுத்தப்பட்டுள்ளது.
11. இம் மாதத்தில் 500 இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. ஒரு இரத்தப் பரிசோதனைக்கான கட்டணம் ரூ 70 ஆகவும் அவற்றைச் செய்வதற்கான ஒரு பரிசோதனைக்காகப் பயன்படுத்திய பொருட்களின் செலவு ரூ 40 ஆகவும் காணப்பட்டன. இந்நடவடிக்கைகள் காசு மூலம் மேற்கொள்ளப்பட்டன.
12. இரத்தப் பரிசோதனை இயந்திரத்தின் ஏப்ரல் மாதத்திற்கான பெறுமானத் தேய்வு ரூ 15000 ஆகும்.

பின்வரும் மேலதிக தகவல்கள் 05.05.2021 இல் கிடைக்கப்பெற்ற வங்கிக் கூற்றிலிருந்து பெறப்பட்டன. வணிகத்தின் 30.04.2021 இல் உள்ளவாறான காசு மீதியைக் கணிப்பிடுகையில் பின்வரும் தகவல்கள் கருத்திற்கொள்ளப்படவில்லை.

(i) இரத்தப் பரிசோதனை இயந்திரத்தின் பராமரிப்புச் செலவுக்காகக் கொடுக்கப்பட்ட காசோலை ரூ 5000 வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
(ii) ஏப்ரல் மாதத்துக்கான வங்கிக் கட்டணங்கள் ரூ 1000 ஆகும்.
(iii) நிலையான கட்டளையின்படி உரிமையாளரது மகளின் மாதாந்தப் பாடசாலைக் கட்டணம் ரூ 5000 செலுத்தப்பட்டுள்ளது.
(iv) வாடிக்கையாளர் ஒருவரால் நேரடியாக வங்கியில் ரூ 20000 வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது
1. கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி இலக்கம் 1 தொடக்கம் 12 வரையான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை (பெறுமதியுடன்) காட்டுக. ஒவ்வொரு பெறுமதியும் அதிகரிக்குமாயின் (+) எனவும் குறைவடையுமாயின் (-) எனவும் குறிப்பிடுக. (இவ் வினாவுக்கு விடையளிக்கும் போது கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற மாதிரியொன்றைப் பயன்படுத்துக)

(ரூ000)

| கொடுக்கல் வாங்கல்கள் | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உபகரணங்கள் | இருப்பு | வியாபார வருமதிகள் | காசு | வியாபாரக் கொடுக்கு மதிகள் | சென்மதி செலவுகள் | உரிமை யாண்மை |
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| 7. | | | | | | | |
| 8. | | | | | | | |
| 9. | | | | | | | |
| 10 | | | | | | | |
| 11. | | | | | | | |
| 12. | | | | | | | |
| மீதி | | | | | | | |

2. 30.04.2021 இல் உள்ளவாறு காசுக்கணக்கின் திருத்திய மீதி
3. 2021 ஏப்ரல் மாதத்துக்கான வங்கி இணக்கக்கூற்று
4. 30.04.2021 இல் முடிவடைந்த மாதத்துக்கான வருமானக்கூற்று

(மொத்தம் 40 புள்ளிகள்)

04) அ) விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்து விற்பனையில் ஈடுபடும் எழிலகம் வணிகத்தின் பிரித்தெடுக்கப்பட்ட கணக்கு மீதிகளும், கொடுக்கல் வாங்கல்களும் பின்வருமாறு

2021.04.01. இல் உள்ளவாறான மீதிகள் (ரூ000)

| | |
|---|---|
| காசு | 2500 |
| வியாபார வருமதியாளர் | 800 |
| பெறவேண்டிய VAT | 250 |
| பெறவேண்டிய வாடகை வருமானம் | 120 |

2021 ஏப்ரல் மாதத்திற்கான காசுப் பெறுவனவுகளும், கடன் கொடுக்கல் வாங்கல்களும் பின்வருமாறு

| திகதி | மூல ஆவண இலக்கம் | கொடுக்கல்வாங்கல்கள் |
|---|---|---|
| 08.04 | 0112 | ரூபா 600000 இற்கு விளையாட்டு உபகரணங்கள் சுகனுக்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன. |
| 11.04 | 0093 | காசாகப் பெறப்பட்ட மூன்று மாத வாடகை வருமானம் ரூபா 360000 (ஆரம்ப வருமதி உட்பட) |
| 12.04 | 0094 | ரூபா 800000 இற்கு விளையாட்டு உபகரணங்கள் காசுக்கு விற்கப்பட்டது. |
| 18.04 | 0098 | மாலாவுக்கு விளையாட்டு உபகரணங்கள் கடனுக்கு விற்பனை ரூபா 400000 |
| 22.04 | 0095 | 2021 ஜனவரி மாதம் பதிவளிக்கப்பட்ட ரூபா 100000 பெறுமதியான வருமதியாளர் மீதியொன்று நடப்பாண்டில் பெறப்பட்டது. |
| 25.04 | 0096 | சுகன் தனது கடனில் அரைவாசியைக் கொடுத்துத் தீர்த்தார். |
| 28.04 | 0097 | மாலாவுக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனையில் ¼ பங்கு பெறுமதியான பொருட்கள் அவரினால் திருப்பி அனுப்பப்பட்டதுடன் அவரின் முழுக்கடனையும் அதனைத் தொடர்ந்து தீர்த்தார். |

மேலதிகத் தகவல்கள் :

1. நிறுவனமானது VAT இற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், எல்லா கொள்வனவுகள் விற்பனைகளிலும் 15% VAT அறவிடப்படுகிறது. எனினும் மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்களில் VAT உள்ளடக்கப்படவில்லை.
2. கடன் தொகையைத் தீர்க்கும் போது வருமதியாளருக்கு 10% கழிவு அனுமதிக்கப்படும்.
3. 2021.04.30 இல் முடிவடைந்த மாதத்திற்கான காசுக் கொடுப்பனவு நாளேட்டின் சுருக்கம் வருமாறு

| | (ரூ 000) |
|---|---|
| காசுக்கொள்வனவுகள் (VAT நீங்கலாக) | 400 |
| வியாபார சென்மதியாளருக்குச் செலுத்தியது | 360 |
| வரி திணைக்களத்திற்கு செலுத்தியது (VAT) | 40 |
| செயற்பாட்டுச் செலவு செலுத்தியது | 150 |
| இடைக்கால பங்கிலாபம் செலுத்தியது | 60 |
| பெறப்பட்ட காசுக்கழிவு | 45 |

வேண்டப்படுவது

1. மேற்படி கொடுக்கல் வாங்கல்களைப் பின்வரும் மூல ஏடுகளில் பதிவு செய்க.
   - i) காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு
   - ii) விற்பனை நாட்குறிப்பேடு

2. பொதுப் பேரேட்டில் பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்
   - i) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு
   - ii) வியாபார வருமதியாளர் கணக்கு
   - iii) VAT கணக்கு
   - iv) வாடகை வருமானக் கணக்கு

(20 புள்ளிகள்)

ஆ) 1) ஆபிரகாம் வணிகத்தின் 2022.02.28 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கிக் கணக்கிணக்கக்கூற்று பின்வருமாறு (ரூ 000)

| | |
|---|---|
| காசு கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 200 |
| (+) சமர்ப்பிக்கப்படாத காசோலை | |
| காசோலை இலக்கம் 1001 | 100 |
| காசோலை இலக்கம் 1008 | 50 |
| | 350 |
| (-) வசூலிக்கப்படாத காசோலை | |
| காசோலை இலக்கம் 200 | (20) |
| வங்கிக் கூற்று மீதி | 330 |

2) 2022 மார்ச் மாதத்திற்கான காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு மற்றும் காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் பிரித்தெடுக்கப்பட்ட விபரம் வருமாறு

| பெறுவனவுகள் | காசோலை இல | ரூ 000 |
|---|---|---|
| வியாபார வருமதிகளில் பெற்ற காசு | 150 | 220 |
| விற்பனைகள் | - | 250 |
| | | |
| கொடுப்பனவுகள் | | |
| வியாபார சென்மதிக்கான கொடுப்பனவுகள் | 1015 | 150 |
| கொள்வனவுகள் | 1016 | 170 |

3) 2022 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கூற்று பின்வருமாறு (ரூ000)

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 01.03 | மீதி | | | 330 |
| 05.03 | காசோலை 1001 | 100 | | 230 |
| 10.03 | வைப்பு காசு | | 200 | 430 |
| 20.03 | வங்கிக்கட்டணம் | 50 | | 380 |
| 21.03 | பங்கிலாபம் - நேரடி வைப்பு | | 120 | 500 |
| 25.03 | வியாபார வருமதி நேரடிவைப்பு | | 100 | 600 |
| 28.03 | காசோலை – 1015 | 150 | | 450 |

4) 2022 மார்ச் மாதத்தில் பிரித்தெடுக்கப்பட்ட ஏனைய முதன்மை ஏடுகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

- விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூபா 400000
- வியாபார வருமதிகளின் மதிப்பு குறைப்பு நட்டம் மொத்தம் ரூபா 50000 (பொது நாட்குறிப்பேடு)

5) 2022.03.01 இல் வியாபார வருமதிகள் மீதி ரூபா 70000

6) 2022 மார்ச் மாதத்தில் நிறுவன கணக்கேடுகளில் இடம்பெற்ற வழுக்கள் பின்வருமாறு

i) விற்பனை நாட்குறிப்பேடு ரூபா 50000 இனால் குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

ii) ரூபா 10000 பெறுமதியான செலவுத்தாள் கணக்கேடுகளில் பதியப்படவில்லை

iii) ரூபா 200000 பெறுமதியான காசு விற்பனை நிறுவன கணக்கேடுகளில் ரூபா 250000 ஆகப் பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

1) 2022 மார்ச் மாதத்திற்கான திருத்திய காசுக் கட்டுப்பாட்டு கணக்கு
2) 2022 மார்ச் மாதத்திற்கான வங்கி கணக்கிணக்கக் கூற்று
3) 2022 மார்ச் மாதத்திற்கான திருத்திய வியாபார வருமதிகளின் கட்டுப்பாட்டுக் கணக்கு.

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

05) அ) வித்தகன் முகாமைத்துவ ஆலோசனை சேவை வழங்குவதற்காக தனிஉடமை வணிகம் ஒன்றினை ஆரம்பித்தார். 2022.03.31 இல் முடிவடைந்த முதல் வருட காலத்தில் நிறுவனத்தில் இடம்பெற்ற காசுக் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுகின்றது.

| | (ரூ 000ல்) |
|---|---|
| வித்திகனின் மூலதனப்பங்களிப்பு | 330 |
| பெறப்பட்ட ஆலோசனை சேவை வருமானம் | 850 |
| பெறப்பட்ட வங்கிக்கடன் | 900 |
| எழுதுகருவி வழங்குனருக்கு கொடுப்பனவு | 450 |
| கடனுக்கான மீள்கொடுப்பனவு | 180 |
| தளபாட உபகரண கொள்வனவு | 1000 |
| செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள் | 330 |

மேலதிக தகவல்

1. வருடகாலத்தில் செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவுகளின் பகுப்பு வருமாறு.

| | (ரூ000ல்) |
|---|---|
| அலுவலக செலவு | 45 |
| சம்பளம் | 50 |
| விளம்பரம் | 55 |
| வாடகை | 180 |
| | 330 |

2. வருட முடிவில் சென்மதியாகவுள்ள அலுவலக செலவினம் ரூ 10000
3. வாடகை 01.04.2021 இலிருந்து 30.09.2022 வரைக்கும் செலுத்தப்பட்டுள்ளது.
4. வருடகாலத்தில் உழைக்கப்பட்ட ஆலோசனை சேவைக்கான வருமானம் ரூ 1000000
5. வருடகாலத்தினுள் எழுதுகருவி கொள்வனவும் பயன்படுத்தப்பட்ட எழுதுகருவிகளும் முறையே ரூ 550000 உம் ரூ 480000 உம் ஆகும்.
6. 31.03.2022 இலிருந்து வங்கிக்கடன் ரூ 180000 (ரூ30000 வட்டி உள்ளடங்கலாக) வருடாந்தம் 6 சமமான கடன் தவணைப் பணமாகச் செலுத்தமுடியும்.
7. 01.04.2021 இல் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் நேர்கோட்டு முறையில் 5 வருடங்களிற்குக் கிரயத்தில் பெறுமானத் தேய்விடப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது

1. 31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று.
2. 31.03.2022 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

(15 புள்ளிகள்)

ஆ) கதிரவன் பொதியிடல் உறை உற்பத்தி நிறுவனத்தினது ஏடுகளில் இருந்து 2021 ஆம் ஆண்டுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றது.

| 2021.01.01 இல் உள்ளவாறு இருப்பு (ரூபா) | |
|---|---|
| துணிவகைகள் இருப்பு | 7800 |
| குறைவேலை இருப்பு | 1100 |
| தைத்த பொதியிடல் உறை இருப்பு | 20000 |
| துணி கொள்வனவு | 180500 |
| வழங்குநருக்கு திருப்பி அனுபபிய துணிகள் | 2000 |
| தையல் இயந்திர இயக்குனர் கூலிகள் | 60000 |
| தொழிற்சாலை ஏனைய ஊழியர்சம்பளம் | 8000 |
| தனியுரிமைக் கட்டணம் | 10500 |
| தொழிற்சாலை மின்சக்தி | 8000 |
| தொழிற்சாலை காப்புறுதி | 6000 |
| இயந்திர சாதனங்களின் பெறுமானதேய்வு | 18000 |
| 2021.12.31ல் உள்ளவாறான இருப்பு | |
| துணிவகை இருப்பு | 9700 |
| குறைவேலை இருப்பு | 3200 |
| பொதியிடல் உறைகள் இருப்பு | ? |

**மேலதிக தகவல்கள்**

*2021.01.01 இல் 8000 பொதியிடல் உறைகள் கையிருப்பில் இருந்தன. இவ்வாண்டு 95000 ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. மொத்தமாக 85000 பொதியிடல் உறைகள் இவ்வாண்டு விற்கப்பட்டன.*

**வேண்டப்படுவது**

1) 2021.12.31 முடிவுற்ற காலப்பகுதிக்கான உற்பத்திக் கிரயத்தைக் கணிக்கும் கூற்று
2) பொதியிடல் உறை ஒன்றுக்கான உற்பத்திக்கிரயத்தை கணிக்குக.
3) ஆண்டு முடிவில் உள்ள பொதியிடல் உறை இருப்பின் பெறுமதியைக் கணிக்குக.

(15 புள்ளிகள்)

இ) இளமாறன் வணிகத்தின் 2022 பெப்ரவரி 28 இல் சில்லறைக் காசுமீதி ரூபா 680 ஆகக்காணப்பட்டது. இவ்வணிகத்தில் 2022 பெப்ரவரி, மார்ச் மாதங்களிற்கான சில்லறைக் காசுக் கொடுப்பனவு நாளேட்டின் செலவுப்பகுப்பாய்வு நிரல்களின் மொத்தம் பின்வருமாறு எடுக்கப்பட்டது.

செலவுப் பகுப்பாய்வு நிரல்களின் மொத்தம்

| | 2022 மார்ச் (ரூபா) | 2022 பெப்ரவரி (ரூபா) |
|---|---|---|
| தபால் செலவு | 750 | 620 |
| எழுதுகருவிச் செலவு | 700 | 780 |
| போக்குவரத்துச் செலவு | 600 | 500 |
| நானாவித செலவு | 350 | 400 |
| ஏனைய கொடுப்பனவு | 1800 | 1020 |

- 2022 மார்ச் மாத ஏனைய கொடுப்பனவுகளில் உரிமையாளர் பற்று ரூபா 1000 மும் தொலைபேசிக்கட்டணம் ரூபா 800 உம் உள்ளடங்கியுள்ளன.
- 2022 மார்ச் மாதம் கட்டுநிதி ரூபா 500 ஆல் அதிகரிக்கப்பட்டமைக்கு ஏற்ப 2022.03.01 இல் கட்டுநிதி மீளநிரப்பப்பட்டது.
- இளமாறன் வணிகத்தில் 31.03.2022 இல் முடிவடைந்த மாதத்தில் பொதுப்பேரேட்டில் சில்லறைக் காசுக்கணக்கும், சில்லறைக் கைச்சாத்து தொடர்பான பேரேட்டுக் கணக்குகள் தவிர எடுக்கப்பட்ட அனைத்து மீதிகளும் வருமாறு

| | ரூபா |
|---|---|
| காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 39000 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 63000 |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 37000 |
| வங்கிக்கடன் | 60000 |
| கொள்வனவு | 51000 |
| விற்பனை | 133000 |
| தளபாட உபகரணம் | 140000 |
| மூலதனக் கணக்கு மீதி | 67500 |

வேண்டப்படுவது

1) 2022 மார்ச் மாதம் 01 இல் சில்லறைக் காசுக் கட்டுநிதி மீளநிரப்பலுக்கான இரட்டைப் பதிவினைத் தருக.
2) 2022 மார்ச் மாத சில்லறைக்காசுக் கணக்கும் பேரேட்டுக் கணக்குகளும்
3) 2022 மார்ச் 31இல் உள்ளவாறு பரீட்சை மீதியைத் தருக.

(10 புள்ளிகள்)

மொத்தம் 40 புள்ளிகள்

06) அ) வரையறுத்த மலைமகள் கம்பனியின் ஏடுகளில் 01.04.2021 இல் பெறப்பட்ட மீதிகள் வருமாறு

| | ரூ 000 |
|---|---|
| காணி | 1800 |
| கட்டிடம் (கிரயம்) | 2200 |
| விநியோக வாகனம் | 1300 |
| திரண்ட தேய்மானம் - கட்டிடம் | 400 |
| - விநியோகம் | 500 |
| கூறப்பட்ட சாதாரண பங்குமூலதனம் (ஒவ்வொன்றும் 20/- ஆன) | 8000 |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 3000 |
| காணி மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 500 |
| பொது ஒதுக்கம் | 2000 |

31/03/2022 இல் முடிவுற்ற வருட காலப்பகுதியில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

1. 2021 மே - காணி ரூ 1300000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.
2. 2021 ஒக்டோபர் - புதிய விநியோக வான் ஒன்று 2021.10.01 திகதியன்று ரூபா 500000க்கு சிங்கர் கம்பனியில் கடனுக்கு வாங்கப்பட்டது.
3. 2021 டிசெம்பர் - இடைக்காலப்பங்குலாபமாக ரூ 1000000 செலுத்தப்பட்டது.
4. 2021 டிசெம்பர் ஒவ்வொன்றும் ரூ 20 விலையில் 25000 பங்குகள் பகிரங்க வழங்கல் செய்ய முன்விபரணம் செய்யப்பட்டது. விண்ணப்ப முடிவு திகதியில் 30000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று மேலதிக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு எஞ்சிய விண்ணப்பங்களுக்கு பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.
5. 2022 ஜனவரி - 01.01.2022 இல் விநியோக வான் ஒன்று ரூ 320000க்கு விற்கப்பட்டது. இவ்வான் 2018-07-01 திகதியன்று ரூபா 400000க்கு கொள்வனவு செய்யப்பட்டது.
6. 2022 ஜனவரி – 10000 சாதாரணபங்குகள் ரூ 20 படி உரித்து வழங்கல் செய்து உரியவாறு பணம் பெறப்பட்டு பங்கு ஒதுக்கம் செய்யப்பட்டது.
7. 2022 ஜனவரி ஒவ்வொன்றும் ரூ 15 விலையில் 5000 பங்குகள் நிறுத்திவைத்த உழைப்பினை பயன்படுத்தி மூலதனமாக்கப்பட்டது.
8. 2022 மார்ச் பொது ஒதுக்கீட்டினை ரூ 250000 ஆல் அதிகரித்தல்
9. 31/03.2022 இல் கட்டிடம் 1800000 பெறுமதியில் மீள் பெறுமதியில் விலையிடல்

**மேலதிக தகவல்கள்**

காணிதவிர்ந்த மற்றய நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு வருடாந்தம் கிரயத்தில் 10% தேய்விடப்படுவதுடன் 31/03/2022 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான இலாபம் ரூ 2400000 ஆகும். பெறுமானத்தேய்வு மற்றும் ஏனைய முற்றடக்க வருமானம், ஆதனம் பொறிவிற்பனை பெறுபேறு என்பன இலாபநட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வேண்டப்படுவது**

1. 31/03/2022 இல் முடிவடைந்த நிதியாண்டுகளுக்கான உரிமையாண்மை அசைவுக் கூற்று
2. 31/03/2022 ல் முடிவடைந்த வருடத்துக்கான ஆதனப்பொறி மற்றும் உபகரண அசைவுக் கூற்று
3. 31/03/2022 இல் முடிவடைந்த வருடத்துக்கான

   (அ) விநியோக வான்கணக்கு

(ஆ) விநியோக வான் அகற்றல் கணக்கு

(இ) கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கு

4. (அ) கொடுக்கல் வாங்கல் இலக்கம் (04) மற்றும் (05) பதிவு செய்வதற்கான நாட்குறிப்பு பதிவுகள்

(30 புள்ளிகள்)

(ஆ) வெற்றிடங்களுக்கான விடையினை எழுதுக.

| இல | ஆரம்ப தேறிய சொத்துக்கள் | பற்றுக்கள் | இறுதி தேறிய சொத்துக்கள் | மேலதிக மூலதனம் | இலாபம் / நட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | 60000 | 10000 | 98000 | இல்லை | A |
| 2 | 100000 | 18000 | B | 20000 | 40000 |
| 3 | 160000 | 20000 | 250000 | C | 80000 |
| 4 | D | 20000 | 240000 | 70000 | 40000 |
| 5 | 175000 | E | 200000 | 60000 | (10000) |

(10 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)